உயர் தொழில்நுட்பத் தொழிலாளர்களை உருவாக்கும் தமிழ்நாடு!

‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் பாராட்டு!

சென்னை, டிச. 23 -

நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில், மேம்பட்ட உயர் தொழில்நுட்பத் தொழிலாளர்களை உருவாக்கப்பட்டு வருவதாக ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் பாராட்டி உள்ளது.

‘TN’s strides in skilling’ எனும் தலைப்பில் தி டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ் சிறப்புக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

MERCHANTS OF MADRAS
TN'S STRIDES IN SKILLING

அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில் மேம்பட்ட, உயர் தொழில்நுட்பத் தொழில்துறைத் தேவைகளுக்குத் தொழிலாளர்களைத் தயார்படுத்துவதற்காக, சர்வதேச வழிமுறைகளை இணைத்துக் கொண்டு தமிழ் நாடு கூடுதல் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள் ளது.

கடந்த மாதம், இந்தோ-ஜெர்மன் வர்த்தக சபை திறன் மேம்பாட்டை வலுப்படுத்துவதற்காக ஒரு முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாகவும், கோவை மற்றும் சென்னை தாம்பரத்தில் உள்ள சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் சிறப்பு உற்பத்தித் திறன் மேம்பாட்டு மையங்களை அமைப்பதே இதன் நோக்கம் என்றும் இந்த மையங்கள், எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற உலகத் தரத்திற்கு இணையான உற்பத்தித் திறன் களுக்கான ஒரு முன் மாதிரியாக உள்ளதாகவும் கட்டுரையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

உயரிய தொழில் கொள்கை!

இந்த திறன் மேம்பாட்டு மையங்களில் சிஎன்சி எந்திர வேலைப்பாடு, லேத் மற்றும் மில்லிங் செயல்பாடுகளின் குறுகிய கால, தொழில்துறைக்கு ஏற்ற திட்டங்களை அளிக்கும் என்றும் தெரிவித்துள்ளது. கோவையில் உள்ள ஜி.டி. நாயுடு அறக்கட்டளையால் நடத்தப்படும் ஜி.டி.டி.ஐ நிறுவனம், ஏற்கனவே டூல் மற்றும் டை இன்ஜினியரிங், மெக்கட்ரானிக்ஸ், துல்லிய எந்திரவியல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் டிப்ளோமா படிப்புகளையும், டூல் வடிவமைப்பு, மெக்கட்ரானிக்ஸ் மற்றும் ஆட்டோமேஷன் தொழில்நுட்பம் ஆகியவற்றில் முதுகலை டிப்ளோமாக்களையும் வழங்கி வருவதையும், ஜெர்மன் மற்றும் சுவிஸ் கல்வித் தரங்களின் அடிப்படையில் இந்த படிப்புகள் அமைந்துள்ள தாகவும் இதற்கான பாடத்திட்டம் 30 சதவீதம் தியரி மற்றும் 70 சதவீதம் செய்முறைப் பயிற்சி எனும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் இக்கட்டுரை சுட்டிக்காட்டி உள்ளது.

இந்த பாடத் திட்டங்களை தொழிற்பயிற்சி மையங்கள் பள்ளி சார்ந்த தொழிற்கல்விப் பிரிவுகளுடன் இணைப்பதன் மூலம் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் திறமையான தொழில்நுட்ப தொழிலாளர்களையும், உயரிய நோக்கம் கொண்ட தொழில் கொள்கைகளை உருவாக்க முடியும் என தொழில் கூட்டமைப்பு களின் நிர்வாகிகள் தெரிவித்துள்ள தாகவும், இதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதிக முக்கியத்துவம் அளிக்கும் அரசு!

திறன் மேம்பாட்டிற்கு தமிழ் நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதை சுட்டிக்காட்டி உள்ள ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’, தமிழ்நாட்டின் மின் வாகனக் கொள்கை 2023ன் கீழ், மின் சார வாகன உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் 10 சதவீதம் வரை திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க முடியும் என்றும் தளவாடங்களுக்கான உயர் திறன் மேம்பாட்டு மையத்திற்கான பாடத்திட்டத்தை தமிழ்நாடு அரசு வடிவமைத்து வருவதாகவும் ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் வெளியிட்டுள்ள கட்டுரையில் விரிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.12.2025) சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேனாம்பேட்டை மண்டலம், மெரினா கடற்கரை, அண்ணா பூங்கா அருகில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 86.40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட வீடற்றோருக்கான இரவுநேர காப்பகத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர் கே.என்.நேரு, தயாநிதி மாறன் எம்.பி., மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், லைக்குமுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, மண்டலக்குமுத் தலைவர் எஸ். மதன்மோகன், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் - சென்னை கிழக்கு மாவட்டம்

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் - கிறிஸ்துமஸ் பெரு விழா!

முதல்வர் மு.க.ஸ்டாலின் – 3250 கிறிஸ்துவக் குடும்பங்களுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கிச் சிறப்பிக்கிறார்!

சென்னை, டிச. 23-

சென்னை கிழக்கு மாவட்டம், திமுக சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில் இன்று - (23/12/2025 செவ்வாய்க் கிழமை) மாலை 4.00 மணி அளவில் சென்னை, பெரம்பூர், (பிருந்தா திரையரங்கம் அருகில்) தொன்போஸ்கோ பள்ளி வளாகத்தில் வளாகத்தில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு ஏற்பாட்டில், செயலாளர், கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு சுபேர்கான், தலைவர் கிருஸ்துவ நல்லெண்ண இயக்கம் முனைவர் த.இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ, இ.சி.ஐ.சென்னை பேராயர், இந்திய சுவிசேஷ திருச்சபை டாக்டர் கதிரொளி மாணிக்கம், முதன்மை ஆசிரியர், அனுவிரதம் மாத இதழ் சென்னை திருமதி. மாலா காத்ரேலா, தரங்கை பேராயர்/தலைவர், தமிழ் சுவிசேஷ லூட்தரன் திருச்சபை டாக்டர்.A.கிறிஷ்டியன் சாம்ராஜ், ஆற்காடு லூத்தரன் திருச்சபை பேராயர் திரு.டாக்டர்.D.பீட்டர் பால் தாமஸ், ஆற்காடு லூத்தரன் திருச்சபை பேராயர், ரெக்டார்(ம) தாளாளர் பெரம்பூர் டான்போஸ்கோ பள்ளி அருட்தந்தை திரு.ஜோசப் லியோ ச.ச, பேராயர் சி.எஸ்.ஐ.சென்னை பேராயம் திரு.அ.பால்பிரான்சிஸ் ரவிச்சந்திரன், சிரவை ஆதினம் கௌமார மடாலயம் கோவை திருப்பெருந்திரு இராமானந்த குமரகுருபர சுவாமிகள், உறுப்பினர் தமிழ் நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையர் திருத்தந்தை ஏ.சுவர்ணராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் அன்பின் இனிய கிறிஸ்துமஸ் பெருவிழா 2025ஐ, முதலமைச்சர் அவர்கள் தலைமை ஏற்று 3250 கிறிஸ்துவ சகோதரக் குடும்பங்களுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் தெரிவித்து பரிசு பொருட்கள் வழங்கிச் சிறப்புரையாற்றுகின்றார்.

இந்த இனிய விழாவில் இந்த இனிய கிறிஸ்துமஸ் பெருவிழாவில் மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதிவீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன்.எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், இரா.விடுதலை, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு.சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எம்.சி, எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், எஸ்.தனசேகர், டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: P.ஊமைத்துரை, கே.பி.ஆதவன் மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி மற்றும் கழக நிர்வாகிகள், முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

டிசம்பர் 27, 28 – ஜனவரி 3, 4 ஆகிய 4 நாட்கள் நடைபெறும் வாக்காளர்கள் சேர்ப்பு சிறப்பு முகாமில்

விடுபட்ட புதிய வாக்காளர்களை சேர்த்திடும் முக்கிய பணியில் கழகத்தினர் மும்முரமாக ஈடுபடுவீர்!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை,டிச.23–

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் வரைவு வாக்காளர் பட்டியலை பிரித்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மூலம் வழங்கப்பட்டு, அந்த வரைவு வாக்காளர் பட்டியல் பி.எல்.ஏ.2, வசம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

அந்தந்த பூத் பி.எல்.ஏ.2, பி.டி.ஏ, பி.எல்.சி. மற்றும் கழகத்தினர் அனைவரும் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியலை சரி பார்த்திடும் இன்றியமைப் பணியில் இன்று முதல் ஈடுபட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பூத் வாரியாக வாக்காளர் பட்டியலை கழகத்தினர் அனைவரும் சரி பார்த்து எஸ்.ஐ.ஆர். படிவம் தந்தும் வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்களையும், வாக்காளர் பட்டியல் பெயர் இருந்தும் எஸ்.ஐ.ஆர். படிவம் கிடைக்கப் பெறாத வாக்காளர் பட்டியலையும், மற்றும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களையும் கண்டறிந்து மொத்தத்தில் ஒவ்வொரு பாகத்திலும் நம்முடைய கழக வாக்காளர், கழக ஆதரவு வாக்காளர் எவர் பெயரும் விடுபடாத வகையில் அனைவரையும் படிவம் 6 –ல் வாக்காளர்களாக சேர்த்திடும் முக்கிய பணியில் மும்முரமாக ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இறந்த – இடம் மாறிய வாக்காளர்களின் பெயர்கள் மீண்டும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று இருந்தால் அவர்களின் பெயர்களை படிவம் 7 –ல் நீக்கிடும் பணியில் உடனே ஈடுபட வேண்டும்.

இந்நிலையில் இந்திய தேர்தல் ஆணையம் விடுபட்ட வாக்காளர்கள் – புதிய வாக்காளர்களை சேர்ப்பதற்காக வருகிற டிசம்பர் 27, 28 மற்றும் ஜனவரி 3, 4 ஆகிய 4 நாட்கள் சிறப்பு முகாம் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது.

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தியதின் படி வருகிற டிசம்பர் 27, 28 மற்றும் ஜனவரி 3, 4 ஆகிய நான்கு நாட்கள் நடைபெறும் வாக்காளர்கள் சேர்த்து சிறப்பு முகாம்களில் கழகத்தினர் அனைவரும் கடுமையாக உழைத்து வாக்காளர் பட்டியலில் பெயர்கள் இருந்தும் எஸ்.ஐ.ஆர். படிவம் கிடைக்க பெறாதவர்கள், எஸ்.ஐ.ஆர். படிவம் தந்தும் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர்கள் விடுபட்டவர்கள், மேலும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களை சேர்த்திடும் இன்றியமையா முக்கிய பணியில் மும்முரமாக ஈடுபட்டு முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று அனைவரையும் இரு கரம் கூப்பி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் கிறிஸ்துமஸ் விழா

கிறிஸ்தவ ஆலய போதகர்கள் - ஊழியர்களுக்கு பரிசு!

இ. கருணாநிதி எம்.எல்.ஏ வழங்கினார்!

பல்லாவரம் டிச.23-

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்துமஸ் விழா சீரோடும் சிறப்போடும் கொண்டாடுவது வழக்கம் அதுபோன்று இந்த ஆண்டும் 20 122025 சனிக்கிழமை அன்று காலை 11 மணி அளவில் குரோம்பேட்டை ஜி.எஸ்.டி ரோட்டில் அமைந்துள்ள மகிழ் மஹால் திருமண மண்டபத்தில் 600 க்கும் மேற்பட்ட கிறிஸ்துவ போதகர்கள் கிறிஸ்துவ ஆலய ஊழியர்கள் ஆகியோர்களை வரவேற்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி அவர்கள் தன் சொந்த செலவில் கிறிஸ்மஸ் பரிசு வழங்குவது வழக்கம் அது போல் இந்த ஆண்டும் ஒவ்வொருவருக்கும் பேண்ட், சர்ட்., கேக்,பிரியாணி, போன்றவை அடங்கிய பரிசு பெட்டகம் வழங்கினார் முன்னதாக கிறிஸ்துவ மத தலைமை போதகர்கள் கிறிஸ்தவ பாடல்களைப் பாடி மேலும் இந்த திராவிட மாடல் அரசின் ஆட்சியில் ஒவ்வொரு கிறிஸ்தவ சிறுபான்மை மக்களும் பாதுகாப்புடனும் அன்புடனும் நேசத்துடனும் வசித்து வருகிறோம் ஒவ்வொரு ஆண்டும் எங்களை மறக்காமல் எங்களை அழைத்து சிறப்பித்து கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவித்து பரிசு பொருள்களை கொடுத்து எங்களை கௌரவிக்கும் சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவிப்பதுடன் இயேசு கிறிஸ்து அவர்கள் தொடர்ந்து இந்த ஆட்சிக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் நல்ல உடல் நலத்தையும் கொடுத்து இந்த ஆட்சி தொடர அனைத்து நலன்களையும் புரிய வேண்டும் என்று வாழ்த்தி ஜெபம் செய்தார்கள் அதைத் தொடர்ந்து சிறப்புரை ஆற்றிய இ. கருணாநிதி எம்.எல்.ஏ அவர்கள் எங்களது கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த திராவிட மாடல் நல்லாட்சியில் சிறுபான்மை மக்களை காத்திட பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார் மேலும் அனைத்து மக்களும் பயன்படும் வகையில் பல்வேறு சிறப்பு திட்டங்களையும் கொண்டு வந்து மக்களாட்சி புரிந்து கொண்டிருக்கிறார் அவருடைய நல்லாட்சியில் நானும் இந்த தொகுதியில் எந்தவித மத வேறுபாடும் இன்றி அனைவருக்கும் இரவு பகல் பாராமல் உழைத்துக் கொண்டிருக்கிறேன் சிறுபான்மை மக்கள் வாழும் பகுதிகளில் சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறேன் மேலும் கிறிஸ்துவ மக்களுக்கு கல்லறை தோட்டம் அமைக்க பல்வேறு முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறேன் முஸ்லிம் இடுகாடுகளுக்கு சுற்று சுவர் அமைக்க தொகுதி மேம்பாட்டு நிதிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து அமைத்து தந்துள்ளேன் இந்து மத கோயில்களுக்கு கோயில் முகப்பில் பக்தர்கள் வெயிலிலும் மழையிலும் காத்திடும் வகையில் மிகப் பிரமாண்டமான நிழல் குடைகளை தொகுதியில் உள்ள பல்வேறு கோயில்களுக்கு முன்பு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமைத்து தந்துள்ளேன் இது போன்று உங்களுக்காக பணியாற்றும் இந்த திராவிட திராவிட மாடல் ஆட்சி நமது முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மீண்டும் தொடர எப்போதும் நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமாறு உங்களை அனைவரையும் அன்புடனும் பாசத்துடனும் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன் இவ்வாறு சிறப்புரை ஆற்றினார் இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் மண்டலத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை பதில் கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் தலைமை போதகர்கள் பெஞ்சுமேன் ஞானதுரை ராஜன் ஜான் உள்ளிட்ட பல்வேறு பேர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்

நே.சிற்றரசு தலைமை! அன்பகம் கலை – தயாநிதிமாறன் எம்.பி. – நா.எழிலன் எம்.எல்.ஏ. – வினோத் வேலாயுதம் – சைதை சாதிக் பங்கேற்பு!

110 (அ) வட்டத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் த.குணசேகர் அறிக்கை!

சென்னை, டிச.23-

110 (அ) வட்டச் செயலாளர் த.குணசேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணையின்படி, துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் இளம் தலைவர் அவர்களின் ஆலோசனைப் படி சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில் 110 (அ) வட்டத்தில் இன்று (23.12.2025 - செவ்வாய் கிழமை) மாலை 7.00 மணி அளவில் பாகம் - 132, 133, 134, 135 ஆகிய பாகங்களில் தமிழ்நாடு தலைகுனியாது என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்வடி என்ற பரப்புரை புஷ்பாநகர் செங்கேணி அம்மன் கோயில் அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் சைதை சாதிக் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

இப்பரப்புரைக் கூட்டத்திற்கு பாகம் 132, 133, 134, 135 பாகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA, BYA மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 110 (அ) வட்டச் செயலாளர் த.குணசேகர் அறிக்கை விடுத்துள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (22.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு–172, குருநானக் கல்லூரி அருகில் உள்ள வேளச்சேரி மயானபூமியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூபாய் 6.85 கோடி மதிப்பீட்டில் நவீன மயானபூமி கட்டுமானப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

“என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” – இன்று

சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாக வாரியாக கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, டிச.23-

“என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல் திட்டத்தின் படி இன்று (23.12.2025) சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் குறித்து அமைச்சர் மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி இன்று (23.12.2025 செவ்வாய்கிழமை) சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம் வருமாறு:-

எழும்பூர் தெற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 58 , பாகம்: 92, 93, 94, 95. இடம்: நேவல் மருத்துவமனை சாலை, பெரியமேடு

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

மாலை: 4.30 மணி: வட்டம் 96 , பாகம் 143, 154 இடம்: ட்ர்டானிக் செஞ்சிரி கொன்னூர் நெடுஞ்சாலை, அயனாவரம், கரிய மாணிக்க பெருமாள் கோயில் தெரு, துரை சாமி தெரு.

மாலை: 5.00 மணி: வட்டம் 98அ , பாகம் 224, 239, 240. இடம்: ராஜி தெரு, காமராஜர் நகர், சாம்பவார் அயனாவரம் ரோடு, 1வது தெரு, ராஜி தெரு சந்து, ஆஸ்பிரின் கார்டன் 1வது தெரு, மற்றும் அஸ்பிரின் கார்டன் 2வது தெரு, சாமிதாஸ் புரம்.

அம்பத்தூர் தெற்கு பகுதி.

மாலை: 5.00 மணி: வட்டம் 93 , பாகம் 344 , இடம்: 4 வது பிளாக், நக்கீரன் சாலை

மாலை: 5.00 மணி: வட்டம் 88 , பாகம் 283 , இடம்: சுதந்திர தின பூங்கா அருகில் அண்ணா நகர் மேற்கு

மாலை: 5.30 மணி: வட்டம் 88 , பாகம் 288 , இடம்: பட்டேல் ரோடு, குமரன் நகர்

மாலை: 5.30 மணி: வட்டம் 93 , பாகம் 345 , இடம்: 4 வது பிளாக், நக்கீரன் சாலை

மாலை: 6.00 மணி: வட்டம் 89 , பாகம் 247 , இடம்: வெஸ்ட் எண்டு காலனி

மாலை: 6.00 மணி: வட்டம் 90 , பாகம் 325 , இடம்: கலைவாணர் காலனி , அண்ணா தெரு

மாலை: 6.30 மணி: வட்டம் 89 , பாகம் 248 , இடம்: டி.எஸ். கிருஷ்ணா நகர்

மாலை: 6.30 மணி: வட்டம் 90 , பாகம் 326 , இடம்: கலைவாணர் காலனி , அண்ணா தெரு

மாலை: 6.30 மணி: வட்டம் 87 , பாகம் 180 , இடம்: கிழக்கு நிழற்சாலை, கொரட்டூர்

மாலை: 6.30 மணி: வட்டம் 87 , பாகம் 266 , இடம்: எம்.டி.எச். ரோடு பாடி

அம்பத்தூர் கிழக்கு பகுதி.

மாலை: 5.30 மணி: வட்டம் 84அ , பாகம் 190 , இடம்: முதல் வன்னியர் தெரு, கொரட்டூர், சென்னை80

மாலை: 6.00 மணி: வட்டம் 84அ , பாகம் 192 , இடம்: இரயில்வே ஸ்டேசன் ரோடு, கொரட்டூர், சென்னை80

மாலை: 6.30 மணி: வட்டம் 82 , பாகம் 76, இடம்: ஆறுமுகம் நகர், மேனாம்பேடு, அம்பத்தூர், சென்னை53

மாலை: 7.00 மணி: வட்டம் 82 , பாகம் 84, இடம்: ஏகாம்பரம் நகர், மேனாம்பேடு, அம்பத்தூர், சென்னை53

மாலை: 7.30 மணி: வட்டம் 82அ , பாகம் 31, இடம்: பசும்பொன் நகர், 11வது அவென்யு, கள்ளிகுப்பம், அம்பத்தூர், சென்னை53

மாலை: 8.30 மணி: வட்டம் 82அ , பாகம் 32, இடம்:

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி /வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் இ. கருணாநிதி எம்.எல்.ஏ ஏற்பாட்டில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டத்தின் போது கிறிஸ்துவ போதகர்கள் கிறிஸ்துவ ஆலய ஊழியர்கள் ஆகியோர்களுக்கு சொந்த செலவில் பேண்ட், சர்ட், புடவை, கேக், பிரியாணி போன்ற பொருள்கள் அடங்கிய கிறிஸ்மஸ் பரிசு பெட்டகங்களை இ.கருணாநிதி எம்.எல்.ஏ வழங்கி கிறிஸ்துமஸ் வாழ்த்துரை நிகழ்த்தினார் அப்பொழுது மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட், தலைமை கிறிஸ்தவ போதகர்கள் பெஞ்சமின் ஞானதுரை, ராஜம் ஜான் ஆகியோர் உடன் இருந்தனர்.

தியாகராயர் நகர் மேற்கு பகுதி வர்த்தக அணி சார்பில் துணை முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு 500 பேருக்கு அசைவ உணவினை மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ.வழங்கினார். நிகழ்ச்சிக்கு வர்த்தக அணி பகுதி துணை அமைப்பாளர் இரா. ரங்கநாதன் என்கிற ரங்கா தலைமை வகித்தார். இதில் காசி முத்துமாணிக்கம்,ஜெ.கருணாநிதி,கே. ஏழுமலை,பி. ஜெயக்குமார்,பி.மாரி, பாபா சுரேஷ்,கோசு மணி,எஸ். மோகன், ரத்னா லோகேஸ்வரன், மயிலை ஆர்.பாலு, எஸ்.உமாசங்கர்,எம். வெங்கடேசன்,கே. எஸ்.வெல்டிங் ராஜா, ந.மோ.முரளி,டி.கமல், தட்சன் ஹரிஹரன் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.